RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s-22285

# இலக்கியமும் பெண்ணியமும்

**ச. பத்மா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, நந்தா கல்வியியல் கல்லூரி, ஈரோடு-638107, தமிழ்நாடு, இந்தியா.

# Literature and Feminism

**S. Padma** [a, *]

[a] Department of Tamil, Nandha College of Education, Erode-638107, Tamil Nadu, India

* Corresponding Author: padma.haris@gmail.com

Received: 28-09-2022
Revised: 27-10-2022
Accepted: 11-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Feminism is the need for revival of social status of women. It is related to gender discrimination and feminism traces the sociocultural roots of race, oppression and exploitation especially against women. Feminism explains the cultural constructs and gender formation created by men and shows up how the old cultural values changed with the formation of new cultural values. Feminist ideas are mentioned in Tolkappiyam, Sangam literature, devotional literature, epics, mythology and modern literature.

**Keywords:** Feminism, cultural, modern literature, Sangam literature

## முன்னுரை

பெண்ணியம் என்பது பெண்ணின் சமூக நிலையை மறுமலர்ச்சிக்கு உட்படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்துகிறது. இது பாலினப் பாகுபாடு தொடர்பான சமூகப்பண்பாட்டு வேர்களை இனம் கண்டு கொள்ளவும், குறிப்பாக பெண்களுக்கு எதிரான அடக்குமுறை, சுரண்டல் முறையை உணர்ந்து கொள்ளவும் பெண்ணியம் தெளிவான வரையறை அளிக்கிறது. இது ஆணிய பண்பாட்டுக் கட்டமைப்பில், பாலிய உருவாக்கம் ஊடுருவியிருப்பதையும், அதனால் பழைய மதிப்பீடுகள், புதிய பண்பாட்டு மதிப்பீடுகளால் எத்தகைய மாற்றத்தைப் பெறுகின்றன என்பதையும் நன்கு அறிய உதவுகின்றது. இவற்றைத் தொல்காப்பியம், சங்கஇலக்கியங்கள், பக்திஇலக்கியங்கள், காவியங்கள், புராணங்கள், நவீனஇலக்கியங்கள் வழி பெண்ணியச் சிந்தனைகளை முன்வைத்து இக்கட்டுரைப் படைக்கப்படுகிறது.

## இலக்கியத்தில் பெண்கள்

தமிழ் நிலத்தில் பெண்கள் சங்க காலம் தொட்டு கல்விகற்று ஆண்களுக்கு நிகராகத் திகழ்ந்துவந்துள்ளனர் என்பது உண்மைதான். ஆனாலும் அவர்களின் விழுக்காடுகள் குறைவு. மகளிரில் பெரும்பாலோர் 'மனை உறை' மகளிராக வாழ்ந்து போருக்கான 'வீர மறவர்களை ஈன்று புறம் தருதல்' அறம் எனப் போற்றியதாகத்தான் சங்க கால வாழ்க்கை நெறி தெரிவிக்கிறது. அக்கால இலக்கியங்களும் இவற்றையே எதிரொலிக்கின்றன. நவீன தமிழ் படைப்பாளுமைகளில் முதன்முதலாக பெண்ணினத்திற்கு குரல்கொடுத்தவர் பாரதி. நத்தைப் புழுவைபோல ஆணும் பெண்ணும் கூடப்பிறக்கிறோம்.

ஆண் எழுத்தாளர்கள் பலர் தங்கள் படைப்புகளில் பெண்களைப் புதிய கோணத்தில் படைத்திருப்பினும், ஒரு வகையில் அவை குற்ற உணர்வின் வெளிப்பாடே. தவிர பெண் எனில் ஏதோ அச்சம், நாணம், கற்பு, தியாகம், அழகு, மென்மையான உடல், இனிமையான குரல் என்று ஒரு சில பண்புகளுக்காகவே என்பதுபோல கட்டமைக்கும் போக்கும், சீதையாக, தமயந்தியாக, சாகுந்தலாவாக, ஆண்டாளாக, வாசுகியாக, கண்ணகியாக, மாதவியாக, கோப்பெரும்தேவியாக மொத்தத்தில் பெண்ணை உயர்த்துவதுபோல எழுத்தைப் படைத்ததும் அவளைக் காதலன் அல்லது கணவனின் நிழலாகச் சித்தரிப்பதற்கே. நவீன ஆண்படைப்பாளிகளையும் இந்த அடிப்படையிலேயே அணுக வேண்டியுள்ளது.

## சங்க இலக்கியத்தில் பெண்ணியக்கூறுகள்

தமிழ் இலக்கியத்தின் தொன்மையான நூல்களில் ஒன்றான தொல்காப்பியம் ஆண்களின் நிலை குறித்து,

"பெருமையும் உரனும் ஆடூஉமேன"

என்று பெருமையும், வலிமையும் ஆணுக்குரிய பண்புகளாகவும்,

"அச்சமும்நாணும் மடனும் முந்துறுதல்

நிச்சமும் பெண்பாற் குரிய"

இவை பெண்ணுக்குரிய பண்புகளாகவும் சொல்லப்பட்டுள்ளது, அதாவது அச்சம், மடம், நாணம் இவையெல்லாம் பெண்ணுக்குரிய குணங்களாக தொல்காப்பியம் கூறுகின்றது (Ganesaiyar, 2010). மேலும் "கற்பு" என்பது பெண்ணிற்கு கட்டாயமாக்கப்படுகிறது.

பெண்களின் உரிமை சங்ககாலத்தில் தடை செய்யப்படவில்லை. பெண்கள் கல்வி கற்று, நன்கு புலமை பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். மேலும் சங்க இலக்கியமானது பெண்களின் நிலையினை பலவாறாக கூறுகின்றது. அஃதாவது,

"பெண் பிறவி இழிவுக்குரியது" என்று யாரும் கருதவில்லை"

"மணக்கொடை (வரதட்சணை) கொடுமை இல்லை"

"நல்லிற்பாவையன்ன நல் லோற் கணவன்"

"மறுவில் கற்பின் வாணுதல் கணவன்"

என்றவாறு பெண்ணுக்குப் பெருமை தேடித்தரும் வகையில் சான்றோர்கள் குறிப்பிட்டுள்ளனர் (Jeyabal, 2011; Gunasekaran, 2010). சங்ககாலத்திலும் பெண்ணிற்கு கற்பு வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆணைத் தலைமையாகக் கொண்ட குடும்பம் வரவேற்கப்பட்டது.

## திருக்குறள் வழி அறியலாகும் பெண்ணியம்

உலகத்திலுள்ளஅத்தனை ஜீவன்களுக்காகவும் ஒன்றரை அடியில் குறள் எழுதிய திருவள்ளுவர். ஒரே ஒரு ஜீவனுக்காக மட்டும் நான்கடியில் ஒரு பாட்டு எழுதியுள்ளார் தெரியுமா? யார் அந்த பெருமைக்குரிய ஜீவன்?

அந்த பெருமைக்குரியவர், அவரது மனைவி வாசுகி தான். அந்த அம்மையார் தனது கணவரின் செயல்பாடுகள் குறித்து வாழ்நாள் முழுவதும் விமர்சித்ததே இல்லை. அவர் செய்தால் எல்லாம் சரியாகத்தான் இருக்கும் என்று நினைத்தவர்.

தன் கணவர் சாப்பிடும் போது, ஒரு கொட்டாங்குச்சியில் தண்ணீரும், ஒரு ஊசியும் வைத்துக் கொண்டுதான் சாப்பிடுவாராம். அது ஏன் என்று அம்மையாருக்கு விளங்கவே இல்லியாம். ஆனாலும் கணவரிடம் காரணத்தை எப்படி கெட்பதுன்னு அமைதியா இருப்பாராம். இதற்கான காரணத்தை அந்த அம்மையார் இறக்கும் தருவாயில் தான் கணவரிடம் கேட்டாராம். சோற்றுப்பருக்கை கீழே சிந்தினால்

ஊசியில் குத்தி கொட்டாங்குச்சியில் உள்ள நீரில் கழுவி மீண்டும் சோற்றில் கலந்து உண்ணவே அவை இரண்டும் என்றாராம். நீ பரிமாறுகையில் சோற்று பருக்கை சிந்தவே இல்லை. அதனால் அதன் பயன்பாடு உனக்கு தெரியவில்லை என்று நெகிழ்ச்சியாக சொன்னாராம்.

அந்த கற்புக்கரசி ஒருமுறை கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தார். வள்ளுவர் அவரை அழைக்கவே, கயிறை அப்படியே விட்டு விட்டு வந்தார். குடத்துடன் கூடிய அந்தக்கயிறு அப்படியே நின்றதாம். இப்படி ஒரு மனைவி கிடைத்தால், அந்தக் கணவன் கொடுத்து வைத்தவன் தானே! அந்த அன்பு மனைவி ஒருநாள் இறந்து போனார்.

“நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்

பெருமை படைத்து இவ்வுலகு”

என்று ஊருக்கே புத்தி சொன்ன அந்தத் தெய்வப்புலவரே மனைவியின் பிரிவைத் தாங்காமல் கலங்கி விட்டார். நேற்றிருந்தவர் இன்றைக்கு இல்லை என்பது தான் இந்த உலகத்திற்கே பெருமை என்பது இந்தக் குறளின் பொருள் (Puliyur Kesigan, 2009). ஆக தனது கருத்துப்படி அந்த அம்மையாரின் மறைவுக்காக பெருமைப்பட்டிருக்க வேண்டிய அவர் மனைவியின் பிரிவைத் தாளாமல்,

"அடியிற்கினியாளே அன்புடையாளே

படிசொல் தவறாத பாவாய்- அடிவருடி

பின்தூங்கி முன்னெழும்பும் பேதாய்-

இனிதா (அ)ய் என் தூங்கும் என்கண் இரவு"

என்று ஒரு நாலு வரி பாட்டெழுதினார்.

அடியவனுக்கு இனியவளே! அன்புடையவளே! என் சொல்படி நடக்கத் தவறாத பெண்ணே! என் பாதங்களை வருடி தூங்கச் செய்தவளே! பின் தூங்கி முன் எழுபவளே! பேதையே! என் கண்கள் இனி எப்படித்தான் இரவில் தூங்கப் போகிறதோ! என்பது பாட்டின் உருக்கமான பொருள்.

## பக்தியில் பெண்கள்

ஆண்டாள், மீரா, ராதா இம்மூவரின் பெயரைக் கேட்டதும் கண்ணன் நினைவு வருகிறதென்றால் கண்ணன் வேறு இவர்கள் வேறு அல்ல என்ற ஒரு கருத்து நம் மனதில் ஆழமாக இம்மூவருமே கண்ணனோடு ஐக்கியமாகி கண்ணனாகவே நம் எண்ணத்தில் உணர்வில், கண்ணனின் ராதை கண்ணனின் கோதை கண்ணனின் மீரா என்று பதித்தவர்கள். பக்திக்கு இலக்கணமாய் நம்முள் பக்திப்பிரவாகத்தை ஊற்றெடுக்கச் செய்பவர்கள்.

## ஆண்டாள்

ஆண்டாள் என்று எண்ணியவுடன் என் மனதில் ஆண்டாளின் தைரியம், வைராக்கியம், உறுதி, தவம், கண்ணன் மீது கொண்ட அளவில்லா பக்தி கண்ணனோடு தன் பக்தி உணர்வினை வெளிப்படுத்திய பாங்கு அப்பக்தியை நமக்கும் ஊட்டுவது போல தோழிமார்களோடு தன்னை கோபிகையாய் எண்ணி பாடிய திருப்பாவை -என்று நிறைய தவம் போல் பகவானை அடைய தான் நின்று நமக்கு மிகவும் எளிமையாக ஆண்டாளைப் பற்றினாலே போதும் பகவான் நமக்கருளுவார் எனும் நம்பிக்கை அளிக்கும் வகையில் ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்து ஆழ்ந்த பக்தியே வெற்றி தரும் என்பதை உணர்த்தியுளாக தெரிகிறாள்.

ஆண்டாள். அவளை நினைத்தாலே ஓர் பெருமிதம் ஆண்டாளின் நல்ல ஆளுமையுடனான அன்பான தன்னிகரில்லா ஒப்பற்ற உயர்ந்த பக்தி ஆகியவைகளின் அடையாளச் சின்னமாக விளங்குவதாக தோன்றுகிறது. என்ன இருந்தாலும் பூமிபிராட்டியும் திருமகளான லஷ்மியும் இணைந்த திரு அவதாரம் அல்லவா? ஆண்டாள். தெய்வத்திருமகளாயிற்றே. மேலும் இப்பக்தியினால் இவர்கள்

தாங்கிய கஷ்டங்கள் அப்பப்பா எவ்வளவு? அவர்களின் பக்தி அன்றோ அவர்களுக்கு தெளிவான ஞானமாய் பரிமளித்து வைராக்கிய பக்தி உடையவர்களாக மன உறுதியுடன் தாங்கள் கொண்ட பக்தியை எந்நிலையிலும் கைவிடாதவர்களாக கிருஷ்ண பக்தியிலேயே தங்களை முழுவதும் கரைத்துக் கொண்டவர்கள் கண்ணன் மீது கொண்ட பக்தியின் அடையாளமாகவே போற்றப்படுகிறார்கள்.

## மீரா

இவள் கையில் வீணை எடுத்து வாசிக்க தொடங்கியதும் உலகமே மயங்கும். இசையில் மட்டுமல்ல சிறந்தவள். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் மிகச் சிறந்த பக்தர் ஆவர். மீரா பாய் தன் வாழ்க்கை முழுவதையும் கிருஷ்ணனை நோக்கியேதந்து விட்டார். கடவுளிடம் செல்வது அவ்வளவு சுலபமான காரியமல்ல. ஏராளமான தடைகளை தாண்ட வேண்டியிருக்கும். இதில் சில பக்தர்கள் மட்டுமே அசைக்க முடியாத பக்தியையும் நம்பிக்கையும் கொண்டு பக்தியின் உச்சநிலையை அடைகின்றனர். அப்படி தன்னையே அர்ப்பணித்தவர்தான் மீராபாய்.

இவர் ராஜஸ்தானில் உள்ள சௌகரி என்ற கிராமத்தில் பிறந்தார். இவர் ஜோத்பூரை ஆண்ட ரத்தன் சிங்கின் மகள் என்ற பெருமை பெற்றவர். அப்படி ஏகப்பட்ட வசதிகளுடன் பிறந்த மீரா பாய்க்கு நடனம், பாட்டு என்றால் உயிர். ஆனால் ராஜவம்சம் என்பதால் மற்றவர்கள் முன்னிலையில் பாட்டு பாடுவது தடுக்கப்பட்டது. அவர் தன்னுடைய சிறுவயதிலேயே கிருஷ்ணனின் மீது தீராத காதல் கொண்டு இருந்தார். அவரை நோக்கி இசைப்பதும் பாட்டு பாடுவதையுமே தன்னுடைய வாழ்நாள் முழுவதும் செய்து வந்தார்.

கிருஷ்ணனை நோக்கி தெய்வீக பாடல் பாடி தன் மனதை அதில் ஈடுபடுத்தினார். ஒரு நாள் ஒரு துறவி மீரா பாயின் தந்தையை காண அவர் வீட்டிற்கு வந்தார். அந்த துறவி மீரா பாய்க்காக ஒரு கிருஷ்ணர் சிலையை பரிசாக கொடுத்து சென்றார். அவரது தந்தை அதை மீராவிடம் கொடுத்த போது அவர் மிகவும் சந்தோஷம் அடைந்தார். தன் கிருஷ்ணன் தன்னை காண வந்ததாக நினைத்து சந்தோஷம் அடைந்தார். இந்த நிகழ்வும் மீராவின் மனதில் கிருஷ்ணர் இடம் பெறகாரணமாக அமைந்தது.

அவரது தந்தையும் தாயும் சேர்ந்து மீரா பாய்க்கு திருமணம் முடிக்க திட்டமிட்டனர். அப்பொழுது என்னுடைய கணவர் யார் என்று கேட்டதற்கு உன் கிருஷ்ணர் தான் உன் கணவன் என்றதும் அவர் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தார். கிருஷ்ணனையே தன்னுடைய மணவாளனாக ஆக்கிக்கொண்டாராம். ஆனால் குடும்பத்தின் வற்புறுத்தலின் பேரில் 1516-ல் பதினெட்டு வயதில் சுய விருப்பமின்றி போஜராஜன் எனும் சித்தோர்கர் இளவரசனுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார்.

திருமணத்துக்கு பிறகு அவளது வசதி வாய்ப்புகள், செல்வ செழிப்பு, சமூக நிலை எல்லாம் உயர்ந்தும் மீராவிற்கு எதுவும் பெரியதாக தெரியவில்லை. அவளுக்கு திருமணம் ஆனாலும் மாலையில் கிருஷ்ணனை வழிபடுவதும், அவரை நோக்கி மனதார பாடுவது மட்டுமே தன் உலகமாக கொண்டு இருந்தாள். ஆனால் அவர் இப்படி உலகமே மறந்து இருப்பது அவருடைய கணவருக்கும், அத்தைக்கும் பிடிக்கவில்லை. தன்னை முழுமையாக கிருஷ்ணனுக்கு அர்ப்பணித்து விட்டதாக அவள் கூறிவிட்டாள்.

மீராவின் பக்திமயமான காதல் கிருஷ்ணனை நோக்கி அதிகரிக்க அதிகரிக்க அதை அவரது மாமியரால் பொருத்துக் கொள்ள முடியவில்லை. அவள் கிருஷ்ணன் மீது வைத்திருந்த காதலை யாராலும் அசைக்க முடியவில்லை. இதனால் மீரா பாயை கொல்லுவதற்கு அவரது மாமியாரால் திட்டம் தீட்டப்பட்டது ஆனால் கடவுள் கிருஷ்ணனின் அருளால் மறைந்தது. ஒவ்வொரு முறையும் கிருஷ்ணர் மீராவை காப்பாற்றிவிட்டார்.

மீரா பாய் தன் இறுதிக் காலத்தில் குஜராத்தின் துவாரகைக்கு வந்தடைந்தார். அங்கு கோயில் கொண்ட துவாரகதீசன் (கண்ணன்) முன்பு பாடிக்கொண்டே அனைவரும் கண்ணெதிரிலேயே இறைவனோடு கலந்து மாயமானார். அவருடைய அன்பு, காதல், பக்தி எல்லாம் ஸ்ரீ கிருஷ்ணனுக்கே

என்று வாழ்ந்து வந்தார். அப்படியே இறுதி நாளில் இரண்டறக் கலக்கவும் செய்து விட்டார். இவரின் காதல் பரிசுத்தமானது என்று இந்து மதம் இன்றளவும் புகழ்ந்து வருகிறது.

## ராதை

மகாபாரத கதையின் படி கோகுலத்தில் கண்ணனுடன் இருந்த விளையாட்டு தோழிகளில் ஒருவர் ராதை. கோகுலத்தில் இருந்த இயற்கை மற்றும் பகைவர்களின் இடையூரால் நந்த கோபன் தன் மகன் கண்ணனை அழைத்துக் கொண்டு பிருந்தாவனத்திற்கு சென்றார். கண்ணனை பிருந்தாவனத்துக்கு அழைத்து சென்றதால், தன் இணைப் பிரியாத தோழி ராதையுடன் அதிக நேரத்தை செலவிட முடியாமல் போனது. அதோடு, கம்சனை அழிப்பதற்காக கிருஷ்ணர் மதுராவுக்கு செல்ல வேண்டியிருந்தது. இதனால் ராதா, கிருஷ்ணனின் நேசம் அதோடு முடிவடைந்து விடுகிறது. அதனால் ராதைக்கு வேறொரு திருமணம் செய்து வைக்கப்படுகிறது.

திருமணத்திற்கு பிறகும் கிருஷ்ணரையே ராதை நினைத்துக் கொண்டிருந்தாள். இதனால் சுற்றத்தார் ராதையை இகழ்ந்தனர். அதன் காரணமாக ராதை கிருஷ்ணனின் நினைப்பிலேயே இந்த உலக வாழ்க்கையை நீத்து விடுகிறாள். இப்படி கிருஷ்ணரின் இளம் வயது தோழியாக, அவரை நேசித்து தன் காதலை கடைசி வரை மனதில் வைத்திருந்த ராதையை தெய்வமாக வணங்குகிறார்கள்.

திருமணம் என்பது இரண்டு நபர்களுக்கு இடையே நடக்கக்கூடிய ஒன்று. அது ஒரு ஒப்பந்தம். ஆனால் அது எப்போதுமே இரண்டு உயிராகத்தான் இருக்க முடியும். ஆனால் காதல் என்பது அப்படியல்ல. அது ஒரே உயிராக மட்டும் தான் இருக்க முடியும். நாம் இருவரும் எப்போதும் ஒரே உயிர் தான். இரண்டு நபர்கள் அல்ல என்று சொன்னாராம். நமக்கு இடையே தேவலோக பந்தம் இருக்கிறது. ஆனால் பூலோக திருமணம் நம் இருவருக்கும் சாத்தியமில்லாத ஒன்று என்று கூறியிருக்கிறார் கிருஷ்ணர். அவர்கள் தங்களுடைய நட்பு, பாசம், மகிழ்ச்சி நிறைந்த நினைவுகளை பகிர்ந்து கொண்டார்கள். உன்னுடைய கடைசி ஆசை என்னவென்று கிருஷ்ணர் கேட்டபோது தன் இளமைக்காலத்தில் எந்த குழல் இசை தன்னை பரவசமாக்கியதோ அதே இசையை மீண்டும் கேட்க வேண்டும்என்று கூறினார் ராதை.

அந்த தெய்வீக புல்லாங்குழலின் சக்தியால் அவர்கள் இருந்த இடத்தை யாரும் தொந்தரவு செய்யவில்லை. இரவு பகலாக ராதையின் ஆசையை நிறைவேற்ற கிருஷ்ணர் தொடர்ந்து வாசித்துக்கொண்டே இருந்தார். ராதையை மரணம் நெருங்கி அவர் கிருஷ்ணரின் ஆன்மாவுடன் இணையும் வரை அந்த இசை தொடர்ந்தது. ராதையின் மரணத்திற்கு பிறகு அவர்களின் அன்பு நித்தியத்தன்மையை அடைந்தது. கடவுளாக இருந்தாலும் ராதையின் பிரிவையோ, மரணத்தையோ கிருஷ்ணரால் தாங்கிக்கொள்ள இயலவில்லை. அவர்களின் அன்பின் சின்னமாக அந்த புல்லாங்குழலை நிறுத்தி, அவரின் காதலை முடிவுக்கு கொண்டுவர எண்ணினார் கிருஷ்ணர். தனது புல்லாங்குழலை உடைத்து அதனை தூக்கியெறிந்தார். அன்றிலிருந்து தன் மரணம் வரை கிருஷ்ணர் எந்த கருவியையும் வாசிக்கவேயில்லை.

மூவரிலும் ஆண்டாள் பெற்ற பேறு மகத்தானது கண்ணனை திருமணம் செய்து கொண்டாள். கனவில் வைபவத்தை கண்டதாகப் பாடி பகவானே பெரியாழ்வாரிடம் அவர் தவப்புதல்வி ஆண்டாளை அழைத்து வரச் சொல்லி பாண்டிய மன்னனுக்கும் அதற்குதவ கட்டளையிட்டு திருவரங்கம் வருமாறு அனுக்ரஹித்து தன்னோடு இணைத்துக் கொண்டார்.

## இறையன்பில் பெண்கள்

### காரைக்கால் அம்மையார்

சைவ சமய 63 நாயன்மார்களில் இவரும் ஒருவர். இவருக்கு பரமதத்தன் என்றவருடன் திருமணம் நடைபெற்றது. ஒரு வாணிபத்தலத்திலிருந்து இரண்டு மாங்கனிகளைக் தன் வீட்டிற்கு அனுப்பியிருந்தான். கணவன் உணவு உட்கொள்ள வருமுன், ஒரு சிவனடியார் புனிதவதியின் வீட்டுக்கு வந்தார். அவரை வரவேற்று அமுது படைத்தாள். அந்த நேரத்தில் சோற்றுடன் கணவன் அனுப்பியிருந்த

ஒரு மாங்கனியையும் அவருக்குப் படைத்தாள். அதன் பின் கணவன் உணவு உட்கொள்ள வந்தான். எஞ்சியிருந்த மாங்கனியை கணவனுக்கு படைத்தாள். மாங்கனி அதிக சுவையுடன் இருந்ததால் மற்றொரு பழத்தையும் கேட்டான். புனிதவதி பயந்து போய் சிவபெருமானிடம் வேண்டி பழத்தை பெற்றாள். இந்த பழம் மட்டும் எப்படி சுவையாக உள்ளது என்று கேட்டான்.

அப்போது நடந்ததை புனிதவதி தன் கணவனிடம் கூறுகிறாள். உடனே தன் முன்பே மீண்டும் அதே போல் எனக்கு ஒரு பழத்தை தருவிக்க முடியுமா என்று கேட்கிறான். புனிதவதியும் பயத்துடனே கடவுளிடம் பிராத்தனைச் செய்து பழத்தை தருகிறாள். இதனால் பரமதத்தன் இவள் சாதாரணப் பெண் அல்ல இவள் தேவதை தான் என்று அஞ்சினான். தன் மனைவியைப் பக்தியுடன் பார்க்கிறான். பரமதத்தன் புனிதவதியை விட்டு வேறு ஒரு நாட்டிற்குச் செல்கிறான். அங்கேயே வியாபாரம் செய்து வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்துக் கொள்கிறான். இதனை அறிந்த புனிதவதி மிகவும் மனம் வருந்துகிறாள்.

சிவபக்தையான அவளுக்கு உலகில் வாழ்க்கை இல்லை என்று நிர்ணயித்து விட்டது. இந்த நிலையில், அவள் சிவனைத் தொழுது, பரமதத்தனுக்கு உரிமையான அவ்வுடலை இளமையை, அழகிய உருவைத் துறந்து, சிவனின் பக்திக்குகந்த பேயுரு தனக்கு வேண்டும் என்று இறைஞ்சினாள் என்றும் அனைவரும் கண்டு நிற்கையிலேயே அவள் பேயருவானாள் என்றும் கூறப்படுகிறது. பூமியில் ஓராடவனுக்குத் திருமண விதிப்படி உரிமையான பிறகு, அந்தப் பெண், ஆண்டவனுக்கும் கூடத் தன் உடலை உரிமையாக்க முடியாது என்ற கற்பியல் மிக அழுத்தமாக இந்த வரலாற்றில் அறிவுறுத்தப்படுகிறது.

## ஔவை

காலந்தோறும் வாழ்ந்த ஔவையார் என்னும் புலவர்களில் இந்த ஔவையார் சங்ககாலப் புலவர். ஔவையின் வாழ்க்கை வரலாற்றினை நோக்குங்கால், அவர் 12ம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழகத்தில் வாழ்ந்தவர் என்று அறியப்படுகிறது. இவர் தந்தையார் பகவன் எனவும் தாய் ஆதி எனவும், அவர்களுக்கு ஏழாவது குழந்தையாக ஔவை பாணரகத்தில் அவதரித்ததாகவும் ஒரு குறிப்பு காணப்படுகிறது.

இப்போது இருக்கும் நட்பை விட சங்ககாலத்தில் அதியமானுக்கும், ஔவையாருக்கும் இருந்த நட்பு உயிரை கொடையாக கொடுக்கும் அளவிற்கு இருந்தது. எப்படியெனில், அதியமான் நீண்ட நாள் வாழ்வதற்காக கிடைத்த நெல்லிக்கனியை ஔவையாருக்கு கொடுத்தார். ஔவை அதியமானின் நட்பை சிறப்பிப்பதற்காகவே இருந்தார்.

இதே போல் தமிழ் மூதாட்டி ஔவை பற்றிய வரலாற்றிலும், ஔவை தனக்கு மண்ணுலகபரபான குடும்ப வாழ்வு வேண்டாம் என்று, முதுமையைத் தெய்வ வரமாகக் கேட்டுப் பெற்றாள் என்று கூறப்படுகிறது.

## தூய பக்தியில் சபரி

வேட்டுவ குலத்தில் அப்பெண் குழந்தை பிறந்தது. மற்ற குழந்தைகளைப் போலவே அக்குழந்தையும் காட்டுச் செடி போல வளர்ந்தது. ஆனால் இக்குழந்தை சேற்றில் மலர்ந்த செந்தாமலையைப் போல வேடுவ குலத்தில் பிறந்தது. சிலருக்கு பகவானின் அனுக்கிரகமும் வீடுபேறும் தங்களது வாழ்நாளில் அவர்கள் கடைபிடிக்கும் நெறிமுறைகள் பாவ புண்ய பலன்களால் கிட்டும். அப்படி ஒரு தெய்வீகமான ஒரு ஆத்மா தான் சபரி.

மற்ற குழந்தைகள் போல் தன்னால் இயல்பாக வாழ்க்கையோடு இருக்க முடியாது என்பதை உணர்ந்துக் கொண்டால். வேட்டுவப் பெண் அல்லவா இயல்பிலேயே துணிவும் அஞ்சா நெஞ்சமும் அத்தனை தூரம் காட்டில் பயணிக்க உறுதுணை புரிந்தது.

அவளின் நீண்ட பயணத்திற்குப் பின் அதிகாலையில் மதங்க முனிவரின் ஆசிரமத்திற்கு வந்தடைந்தாள். முனிவரின் தெய்வீக உருவம் அவளுடைய மனதில் பதிந்து விட்டது. அதனால் அவர்கள் தினமும் பம்பை நதியில் நீராட போகும் வழியில் இருக்கும் முட்களையும், புதர்களையும் அகற்றிச் சுத்தம் செய்கிறாள். முனிவர் இதனை யார் செய்வது யார் என்றுப் பார்க்கச் சொல்கிறார். ஒரு சின்னக் குழந்தை தான் சுத்தம் செய்கிறாள் என்று தெரிந்தப் பிறகு அவளை அழைக்கிறார். தன் ஞான திருஷ்டியில் சபரியின் பிறப்புக் காரணத்தை அறிய முடிந்தது.

அவரை வணங்கிய சபரி தன்னால் முடிந்த சேவையைச் செய்ய அனுமதி வேண்டுகிறாள். சபரிக்கும் அனுமதி தருகிறார். இதனால் மற்ற சீடர்கள் அவரை கேவலமாக பேசுகிறார்கள். இதனைப் பற்றி அறியாமல் சபரி ஆஸ்ரமத்தில் அனைத்து வேலைகளையும் செய்கிறாள்.

தன்னை விட சிறிய வேட்டுவப் பெண்ணைத் தன் குடிலில் வைத்துயிருப்பதை தவறாக அனைவரும் பேசுவதைக் கேட்டு அமைதியாகவே இருக்கிறாரர். இதனால் கோபப்பட்டு மற்ற சீடர்கள் அனைவரும் அவரை கேவலமாக பேசுகிறார்கள். அப்போது ஒரு சீடர் எப்போதும் போல் குளிக்க ஆற்றில் இறங்குகிறான். ஆனால் ஆற்றில் இருக்கும் தண்ணீர் அனைத்தும் சாக்கடை நீர் துர்நாற்றத்துடன் ஓடிக் கொண்டிருந்ததைக் கண்டு பயந்து முனிவரிடம் கூறுகிறான்.

முனிவர் மென் முருவலுடன் சபரியை நான் சொன்னேன் என்று சொல்லி அதில் நீராடச் சொல்லுங்கள் என்று என்றார். அவர் கூறியதுப் போல் எதைப் பற்றியும் யோசிக்காமல் ஆற்றில் இறங்குகிறாள். அவள் இறங்கிய உடனே ஆற்றிக் நீர் மிகத் தெளிவான தூய்மையான நீராக மாறியது. இதனால் சபரியைப் பற்றி இழிவாக பேசியவர் எல்லாம் தத்தம் வாயை மூடிக் கொண்டார்கள். அவளுடைய பெருமையை உணரும் வகையில் அந்த நிகழ்வு இருந்தது.

மதங்க முனிவர் காலம் முடியும் தருவாயில் சபரியை அழைத்து தனக்குப் பிறகு இந்த இந்த குடியிலை நீ தான் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும், தகுந்த சமயத்தில் ராமர், லஷ்மணன் வருவார்கள் அதனால் அவர்களுக்காக காத்துக் கொண்டுயிரு என்று கூறினார்.

சபரிக்கு வயதான பின்பும் இராமனின் நாமத்தை சொல்லிக் கொண்டே தன் காலத்தை இராமனுக்காக காத்துக் கொண்டு இருந்தாள். அதன் படியே இருவரும் வருகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்து தருகிறாள்.

இராமன், இத்தனை காலத்தினால் முனிவர் என்னென்ன செய்து இருக்கிறார் என்று எனக்கு காட்டு என்று சொல்லியதால் இருவரையும் அழைத்துச் செல்கிறாள். இங்கு இருகிற ஏழு கிணறுகள் அவரால் மதங்க முனவரைால் ஏற்படுத்தப்பட்டவை. வயதான காரணத்தால் கால், சுத்த ஜலம், நெய், கரும்புச்சாறு போன்று ஏழு கிணறுகளில் இருந்து தன் பக்கத்திலேயே வைத்துக் கொண்டார் என்று அவரின் பெருமைகளைச் சொல்லிக் கொண்டுயிருந்தால். ஒரு வேட்டுவப் பெண்ணிற்கு புவியில் ஞானம் இருந்தது என்று மிக ஆச்சியப்பட்டார். அவளின் வழிகாட்டுதலின் தான் சுக்ரீவன் இருப்பிடம் சென்று அவன் உதவியை கோருகின்றனர்.

தன் குருநாதர் இருக்கும் லோகத்துக்கு போக அனுமதி அளிப்பீர்களா என்று இராமனிடம் கேட்டதால் அப்படியே ஆகட்டும் என்று தீ மூட்டி அதில் வீழ்ந்து தன் பிறவித் தளைகளை அறுக்கிறாள். ஒரு சாதாரண வேட்டுவப் பெண்ணிற்கு எப்படி இப்படி மோட்சம் கிடைத்தது என்று அனைவரும் வியப்பில் இருந்தார்கள். இதற்கு காரணம் தன் உடல், பொருள், ஆவி அனைத்தும் இராமனின் பெயரையே உச்சரித்துக் கொண்டுயிருந்ததால் தான் அவளினால் மோட்சம் அடைய முடிந்தது.

இங்கே சபரிக்கு ராமபிரான் மோட்சம் கொடுக்கவில்லை. சபரி மோட்சம் அடைவதற்கு ராமபிரான் சாட்சியாக இருந்தார் என்பதே சரி. அதனாலே தான் அவள் கேட்காமலேயே ராமபிரான் கொடுக்காமலேயே மோட்சம் தானகவே வந்தது.

## அக்கமாதேவி

இளமையிலேயே சிவபக்தச் செல்வியாக விளங்கிய அக்கமாதேவி, திருமண பருவம் வந்தபோது, உலக வாழ்வு பற்றிய சிந்தனையே இல்லாதவராகவே இருந்தார். உலகியல்

வாழ்வுக்கப்பால், தம்மை சென்ன மல்லிகார்ச்சுன சுவாமிக்கு அர்ப்பணித்தவராய், ஞான வழியிலேயே தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்.

பேரழகுடன் திகழ்ந்த தன் மகளுக்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்தாலும் தன் மகளை துன்புறச் செய்யவும் விரும்பாத பெற்றோர்கள் இவர்கள் என்பதால் இருவரும் அமைதிக்காத்தார்கள். அந்தத் தருணத்தில் அந்த நாட்டின் மன்னன் கௌசிக மன்னன் மங்கையின் அழகில் மயங்கி திருமணம் செய்வதற்கு கேட்கிறான். திருமணம் பேச வந்த அனைவரிடமும் தன்னை சிவபெருமானுக்கே தன்னை அர்பணிந்துவிட்டேன் என்று அனைவரையும் அனுப்பி வைக்கிறாள்.

மன்னனின் மிரட்டலுக்கு பயந்து தன் மகளை அவருக்கு மணம் முடிகிறார்கள். ஆனால் இல்லற வாழ்க்கையில் ஈடுபடாமல் சிவனடியார்களுக்கே தொண்டு செய்கிறேன் என்று அரண்மனைக்கு அழைத்து வந்து அவர்களுக்கு விருந்து படைப்பதைப் பார்த்து மன்னன் கோபம் கொண்டதால் அரண்மனை வாழ்க்கையை துறக்கிறாள். அணிகலன்கள், ஆடைகள் யாவற்றையும் துறந்து நிர்வாணமாகப் பயணம் புறப்படுகிறாள். அசாத்திய தைரியத்துடன் தனது கரிய அடர்ந்த கூந்தலால், மேனி முழுவதும் மூடவிரித்து இவர் நடந்தாராம். வாழ்வியல் ஆன்மிக இலட்சியம் இரண்டு முனைகளையும் தம் அனுபவ சாதனைகளாகப் பெண் என்ற உணர்வுகளோடு, இணைக்கும் அனுபவங்களாகவே அவை வெளிப்படுகின்றன.

## புராண காலத்தில் புதுமைப் பெண்

### ராமாயணத்தில் ஊர்மிளா

ராமாயணத்தில் உண்மையில் கதாநாயகி யார் என்றால் லட்சுமணன் மனைவி ஊர்மிளா தான். ஏனெனில் கணவன் லட்சுமணன், ராமனுடன் காட்டுக்குச் சென்றவுடன் 14 வருடங்கள் தன் வாழ்க்கையைத் தியாகம் செய்தவள்.

காட்டில் ராமனும் சீதையும் குடிலில் உறங்கிக் கொண்டிருந்தபோது குடிலுக்கு வெளியே லட்சுமணன் உறங்காமல் காவல் காத்துக் கொண்டிருப்பான். அப்போது நித்திராதேவி லட்சுமணன் உறங்க வைக்க முடியாமல் மிகவும் திணருவாள். நித்திராதேவியிடம் நான் சொன்னேன் என்று என் மனைவி ஊர்மிளாவிடம் சென்று என் தூக்கத்தை எடுத்துக் கொள்ளச் சொல்லுங்கள் என்று கூறினான். இதனால் 14 வருடங்கள் அவன் தூக்கத்தையும் தானே வாங்கிக் கொண்டு, பெரும் பகுதியைத் தூங்கியே கழித்தாள். இதனால் போரில் வெற்றியும் அடைந்தார்கள்.

அதுமட்டுமல்ல, ராமனுடன் காட்டுக்குப் போவதற்கு முன் தன் மனைவியைப் பார்க்க வருகிறான். அப்போது அவள் மிக அலங்காரத்தோடு மிகவும் மகிழ்ச்சியோடு இருப்பதைப் பார்க்கிறான். அரச போகங்களை ஆண்டு அனுபவிக்காமல் வெளியே செல்லக் கூடாது என்று தன் கணவனிடம் ஆணையிடுகிறாள். இதனால் மனம் வெறுத்து தன் மனைவியிடம் கூறாமலேயே காட்டுக்குச் செல்கிறான். ஆனால் நடந்தது என்னவென்றால் தன் கணவன் ராமனுக்கு செய்ய வேண்டிய சேவைகளில் எந்த ஒரு பங்கமும் வரக் கூடாது என்பதற்காக தான் அப்படி ஒரு நாடகம் நடத்துகிறாள். இந்த விஷயத்தை தன் கணவனிடமும் கூறாமல் கணவனை வெறுப்பது போல் நடிக்கிறாள்.

14 வருடங்கள் முடிந்த பிறகு நாட்டிற்கு வந்த பிறகு கூட தன் மனைவியிடம் பேசாமல் அவளை வெறுக்கிறான். இதை அறிந்த சீதை லட்சுமணிடம் ஊர்மிளா ஏன் அப்படி நடந்துக் கொண்டாள் என்பதற்கு விளக்கம் கொடுக்கிறாள். உடனே ஊர்மிளாவைக் காண விரைகிறான் லட்சுமணன். அவள் தன் மனைவி என்பதையும் மறந்து தன் மனைவி காலில் விழுந்து கண்ணீரால் நனைய வைக்கிறான்.

தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் என சித்தரிக்கப்படும் சங்ககாலத்தில் ஆண் புலவர்களுக்கு நிகராக பெண் புலவர்கள் இலக்கியத்தில் திறன் மிக்கவர்களாக இருந்துள்ளனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என உலகப் பொது உடைமை போற்றிய தமிழரின் 'பெண்ணியச் சிந்தனை' எவ்வாறு இருந்தது, பெண்கள் எத்தகைய பெருமை மிகு நிலையில் வாழ்ந்தார்கள் என்பதைக் கூறலாம்.

## சமயமும் பெண் இலக்கியமும்

ஆண்களைக் காட்டிலும் சமய நம்பிக்கையில் ஆழ்ந்த ஈடுபாடுள்ளவர்கள் பெண்கள். ஆனால் உலகில் மதங்களுக்குப் பெண்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தை, மதங்கள் பெண்களுக்குக் கொடுப்பதில்லை என்பதே உண்மை. 'பெண்ணாவது தெய்வமாவது ஆதி! என் எண்ணப்படி எது நடக்கிறது? பாத்திமாவுடன் பேசியபடி பாலைவனத்தைச் சுற்றி வர ஆசை. மேரி கையிலிருந்து குழந்தையை வாங்கி என் இடுப்பில் வைத்துக்கொண்டு பெத்லஹெம் மற்றும் சுற்று புற பிரதேசங்களைப் பார்த்துவர ஆசை. இப்படி இவன் காலடியில் உட்கார்ந்திருப்பதில் என்ன சுகம்? அக்கடா என்று படுக்க ஒரு பாம்பு படுக்கை உண்டா எனக்கு?' என ஒவ்வொரு பெண்களும் கேட்பது போல் இருக்கின்றன.

## முடிவுரை

பெண்கள் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட பெருமக்கள் பலர். அவர்களுள் முக்கியமானவர்கள் ராஜாராம் மோகன்ராய், அண்ணல் மகாத்மா காந்தி அடிகள், பெரியார், திரு வி.க., கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, பாரதியார், பாரதிதாசன் இன்னும் பலர். பெண் விடுதலைக்காக எழுச்சி மிகுந்த பாடல்களையும் பாரதியார் பாடியுள்ளார். "மங்கையராகப் பிறப்பதற்கே நல் மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா!" என்று கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை பெண்ணின் உயர்வை போற்றிப் பாடியுள்ளார். சங்ககாலத்தில் மட்டுமல்லாமலும் தற்காலத்திலும் கல்வி, மருத்துவம், சட்டம், பொறியியல் என அனைத்துத் துறைகளிலும் பெண்கள் தடம் பதித்துள்ளனர். தாயாண்மை சமுதாயத்தில், பெண்ணின் உயிர் பறிக்கா உதிரப் போக்கும், ஒரு உயிரைப் பிரசவிக்கும் கர்ப்பமும், பயத்தைத் தந்து சமுதாயம் அவளைப் போற்றக் கூடிய நிலையைத் தந்திருந்தது. ஆனால் இயற்கையின் இரகசியங்கள் மெல்ல உடைபட்ட பிறகு நிலவுடமைக் காலத்தில் அதே உடலைச் சொல்லியே அவள் அடிமைப் படத் தக்க உணர்வுகளையும் தந்து மெல்ல மெல்ல தன் ஆதிக்க கரங்களை அவள் கழுத்தில் வைத்து, பெண் என்பவள் ஆணுக்கான உடமைப் பொருளாகவும் பக்தி இலக்கியங்கள் தலை யெடுத்த காலத்தில் மண் பொன், என ஆண் ஆசை வைக்கக் கூடாத பொருட்களின் பட்டியலில் பெண் என்பதை சேர்த்ததன் மூலம் அவள் ஆணின் சுகத்துக்கானவளாகவும், வணிகமயமாக்கலின் போது நுகர்பொருளாகவும் மாற்றி விட்டது.

## References

Ganesaiyar, (2010) Tholkappiyam Urai, International Institute of Tamil Studies, Chennai, India.

Gunasekaran, K.A. (2010) Pathitrupathu pathurai, International Institute of Tamil Studies, Chennai, India.

Jeyabal, R. (2011) Agananooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License